**றம்புக்கன பிரதேச சபை**

**கேகாலை மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூன் 22 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து றம்புக்கன பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2014 ஏப்ரல் முதல் செப்தெம்பர் வரை சப்ரகமுவ மாகாண சபையிலிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 9,205,102 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்படாதிருந்தும் ஆண்டிற்குரிய மிகை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய முத்திரைக் கட்டணங்களுக்குரிய பட்டோலைகள் கிடைத்திராததுடன் அது தொடர்பாக

மதிப்பீடு செய்யப்பட்ட வருமானமொன்றைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் இறுதியில் கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் கணக்கீடு செய்யப்படாதிருந்தும் மீளாய்வாண்டின்போது முன்னைய ஆண்டிற்காகக் கிடைத்த ரூபா 8,045,307 தொகையான முத்திரைக் கட்டணம் மீளாய்வாண்டிற்குரிய வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்காக முன்னைய ஆண்டிற்குரிய வட்டி ரூபா 1,033,637 தொகை மீளாய்வாண்டில் வட்டிச் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் 2012 இன் இறுதிக் காலாண்டிற்குரிய செலுத்த வேண்டிய வட்டியான ரூபா 558,588 தொகை கணக்கீடு செய்யப்படாதிருந்தும் திரண்ட நிதியத்திலும் செலுத்தவேண்டிய கடன்கொடுத்தோரிலும் அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் நிலுவைக் கடன் தவணைப் பணத்திற்கான தண்ட வட்டி ரூபா 29,532 தொகை கணக்கீடு செய்யப்படாதிருந்தும் ஆண்டின் மிகை மற்றும் கடன்கொடுத்தோர் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2014 ஆம் ஆண்டிற்குரிய 2015 ஆம் ஆண்டின்போது செலுத்தப்பட்ட ரூபா 65,824 தொகையான நானாவித செலவினங்கள் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

07 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 83,095,810 ஆக இருந்ததுடன், அதற்குரிய உபயோகப் பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 88,568,419 ஆனமையால் வேறுபாடு ரூபா 5,472,609 ஆகும்.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஏனைய வருமானங்களுக்குரிய கிடைக்கவேண்டிய மீதிகளின் பெறுமதியான ரூபா 8,834,978 இல் 42 சதவீதம் அதாவது 3,756,086 தொகை வருடமொன்றிற்கு மேற்பட்ட பழைய மீதியாகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட செலவினக் கடன்கொடுத்தோர் மீதியான ரூபா 3,250,034 வருடமொன்றிற்கு மேற்பட்ட பழையதாகும்.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2005 திசெம்பர் 19 ஆந் திகதிய PED 33 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிறுவனத்தின் மிகையான பணத்தை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யும் போது அரசாங்க வங்கியின் ஊடாக மாத்திரம் முதலீடு செய்ய முடியும் எனக் கூறப்பட்டிருந்தும் அதற்கு முரணாக 2006 ஆகஸ்ட் 22 ஆந் திகதி ரூபா 100,000 தொகையில் "First Capital" பெயருடைய தனியார் முகவர் ஒருவர் ஊடாக திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த முதலீடுகள் ரூபா 232,879 ஆக இருந்தது. |
| (ஆ) இலங்கை குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் உப | 2014 ஆம் ஆண்டில் சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த நிரந்தர மற்றும் தற்காலிக பெயர்ப்பதாதைகளில் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்ட 13 |

| | |
|---|---|
| விதியின் 39 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் | பெயர்ப்பதாதைகள் தவிர எஞ்சியவைகளைக் கண்டறிந்து அனுமதியற்ற அறிவித்தல் பதாதை உரிமையாளர்களிடமிருந்தும், விளம்பர நிறுவனங்களிலிருந்தும் கட்டணங்களை அறவிடுவதற்கோ அல்லது அவற்கை அகற்றுவதற்கோ 2014 நவம்பர் 11 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) சப்ரகமுவ மாகாண சபையின் நிதி விதி

---

| | |
|---|---|
| (i) 261.2.2 விதி | 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது 03 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 112,103 கூட்டுமொத்தமான செயல்நிமித்த உப கட்டுநிதி 2015 ஏப்ரல் மாத கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) 283 ஆம் விதி | ரூபா 77,226 கூட்டுத்தொகையான வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்காத 56 காசோலைகள் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

---

| | |
|---|---|
| நிதிப்பிரமாணம் 571 | இரண்டு வருடங்கள் முதல் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 4,506,253 கூட்டுத்தொகையான வைப்புக்கள் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 1146 | சபைக்குச் சொந்தமான 11 வாகனங்களுக்குரிய 2014 ஆம் ஆண்டின் மார்ச் முதல் செப்தெம்பர் வரையான காலத்திற்குரிய ஓட்ட அட்டவணை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,642,635 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,006,363 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 3,363,728 வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 3,363,728 தொகை வீழ்ச்சியடைவதற்கு 03 வருமான விடயங்களில் குறைவும் 05 செலவின விடயங்களில் அதிகரிப்பும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமாக சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2014.01.01 இல் நிலுவை | 2014.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2014 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடலகளில் அறவீடு | 2014.12.31 இல் நிலுவை | | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2014.01.01 இல் காணப்பட்டமீதி | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் நிலுவை | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | ஆதனவரியும் வரியும் | 3,056,270 | 1,667,894 | 5,425,697 | 4,154,628 | 1,388,376 | 971,069 | 2,359,445 |
| ii. | வாடகை | 565,714 | 387,556 | 6,486,396 | 6,016,921 | 178,158 | 469,475 | 647,633 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 684,000 | - | 2,676,822 | 2,651,054 | 684,000 | 25,769 | 709,769 |
| iv | ஏனைய வருமானம் | 5,203,197 | - | 66,452,491 | 64,294,484 | 5,203,197 | 2,158,007 | 7,361,204 |

**2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

---

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பணம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 2,812,501 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 9,205,102 |

**2.3.3 அறிவித்தல் பதாதைக் கட்டணம்**

---

04 நிரந்தர அறிவித்தல் பதாதைகள் மற்றும் 01 தற்காலிக அறிவித்தல் பதாதை என்பவற்றிலிருந்து ரூபா 66,600 வருமானமொன்றை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 ஏக்கர் வரி**

---

2014 சனவரி 01 இல் உள்ளவாறு ஏக்கரி வரி நிலுவை மீதி ரூபா 127,388 ஆக இருந்ததுடன் 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையில் நிலுவையிலிருந்து அறவிடப்பட்ட அளவு ரூபா 21,174 அதாவது 16.62 சதவீதமான மிகவும் குறைந்த சதவீதமாகும். 06 வரியிறுப்பாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 2,207 தொகையான வரி 08 வருடங்கள் முதல் நிலுவையாகக் காணப்பட்டது.

**03 செயற்பாட்டு மீளாய்வு**

---

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்விற்குரிய இம்புல்கஸ்தெனிய நூலகத்தின் பற்றாக்குறையான புத்தகங்களின் பெறுமதி ரூபா 80,073 மற்றும் 25 சதவீதமான தண்டப்பணம் என்பவற்றை உள்ளடக்கிய மொத்தப் பெறுமதியான ரூபா 100,091 கணக்காய்வுத் திகதியான 2014 நவம்பர் 11 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 முதல் கணக்குகளில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கேகாலை பிரதேச சபையிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 200,000 மீதியொன்று தொடர்ச்சியாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பின்னவல பொது மலசல கூடத்திற்காக காசுப் பிரிவு ஒன்றை அமைப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 328,455 செலவிடப்பட்டிருந்த போதிலும் 2015 மே வரையிலும் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2014 நவம்பர் 17 ஆந் திகதி ரூபா 469,928 பெறுமதியான 424 கொடிக் கம்பங்கள் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. 319 கொடிக் கம்பங்கள் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 36,574 பெறுமதியான 33 காடிக்கம்பங்கள் அரசியல் கட்சிகளின் கிளைச் சங்கங்களுக்கும் ரூபா 79,799 பெறுமதியான 72 கொடிக் கம்கங்கள் காணமற்போயுமிருந்தன. இந்த பொருட் பெறுவனவுகள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொருட் பதிவேட்டில் பதியப்படாதிருந்தமை 2015 மார்ச் 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

**04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

2014 இன் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளிலிருந்து 24 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2,297,000 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 09 செலவின விடயங்களுக்குரிய ரூபா 623,346 கூட்டுத்தொகையிலிருந்து மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டை விஞ்சி செலவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்